ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශේෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2388/31 - 2024 ජුනි මස 12 වැනි බදාදා - 2024.06.12

*2388/31 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 4/2013*

**(276 ஆம் அத்தியாயமான) சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டம்**

(276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவை கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரின் ஒருப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்ட விதிகள்.

கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவை
(கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக்காகவும்
அதன் சார்பிலும் கையொப்பமிடப்பட்டது).

கொழும்பு,
*2024, யூன் 10.*

1A - PG 6715 — 379 (2024/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**விதிகள்**

காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான (276 ஆம் அத்தியாயமான) சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் அதன் 23 ஆம் விதியில் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-

(1) அதன் உபவிதி (3) இன் (அ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில், "இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பேரவையினால்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(2) அதன் உபவிதி (3) இன் (ஆ) என்னும் பந்தியில், "இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பேரவையினால்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும் ;

(3) அதன் உபவிதி (8) இற்கான காப்பு வாசகத்தை நீக்கிவிடுவதன் மூலமும் ;

(4) அதன் உபவிதி (10) இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :

"(10) (அ) உபவிதி (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பொது நுழைவுப் பரீட்சைக்கான பரீட்சார்த்தி ஒருவர் பின்வரும் எழுத்திலான பரீட்சை வினாத்தாள்களுக்குத் தோற்றுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும் :-

(i) பொது அறிவு ;
(ii) பொது நுண்ணறிவு ;
(iii) ஆங்கில மொழித் தேர்ச்சி ; அத்துடன்
(iv) சிங்கள அல்லது தமிழ் மொழித் தேர்ச்சி.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர், இவ்வுபவிதியின் (அ) என்னும் பந்தியின் (i) மற்றும் (ii) ஆம் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட பொது அறிவு மற்றும் பொது நுண்ணறிவு வினாத்தாள்களுக்கு சிங்கள, தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலம் விடையிறுப்பதற்கு விருப்புத் தெரிவிக்கலாம்.

(இ) பந்தி (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வினாத்தாள்களுள் ஏதேனும் ஒன்றில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் நாற்பது சதவீதத்துக்குக் குறைந்த புள்ளியைப் பெற்றுள்ள பரீட்சார்த்தி ஒருவர் அனுமதிக்காக தெரிவு செய்யப்படலாகாது.

(ஈ) அனுமதிக்கு தகவுடையவர்களாகவுள்ள பரீட்சார்த்திகளைத் தெரிவுசெய்யும் போது, பொது அறிவு மற்றும் பொது நுண்ணறிவு வினாத்தாள்களில் பெறப்பட்ட புள்ளிகள் திறமை ஒழுங்குவரிசைப்படி கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

(உ) சொல்லப்பட்ட பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் விடையிறுப்பதற்குக் குறித்தொதுக்கப்பட்ட நேரம் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(i) பொது அறிவு வினாத்தாள்களுக்கு ஒரு மணித்தியாலம் ;
(ii) பொது நுண்ணறிவு வினாத்தாள்களுக்கு ஒரு மணித்தியாலம் ;
(iii) ஆங்கில மொழித் தேர்ச்சி வினாத்தாள்களுக்கு ஒன்றரை மணித்தியாலங்கள் ; அத்துடன்
(iv) சிங்களம் அல்லது தமிழ் மொழித் தேர்ச்சி வினாத்தாள்களுக்கு ஒன்றரை மணித்தியாலங்கள்.

EOG 06-0113

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.